
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1178

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

57

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.



# பெருமைக்குரிய பகுத்தறிவு ஆசிரியர் கீ.வை.பொன்னம்பலனார்!

உடையார்பாளையத்தை, சிற்பி போல செதுக்கி, கல்வி - வேலைவாய்ப்பில் முன்னேற்றமடைய பாடுபட்ட பகுத்தறிவு ஆசிரியர் வேலாயுதத்தைப் போலவே, அங்கிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள செந்துறையை அடுத்த கீழமாளிகையைச் சேர்ந்தவர் மற்றொரு ஆசிரியர். பழுத்த ஆன்மிகவாதியாக இருந்த அந்த ஆசிரியரை, பகுத்தறிவு ஆசிரியராக மாற்றியது பெரியாரின் ‘குடி அரசு’ இதழ். பெரியாரியவாதியாக மாறிய பின்னர், கருப்புச்சட்டையோடுதான் பள்ளிக்குச் செல்வார். பெரியாரின் பகுத்தறிவைத் துணைகொள்வதற்கு முன்பே, மறைமலை அடிகளாரின் மொழியியல் கோட்பாடுகளையும் ஏற்றுக்கொண்டிருந்தார்.

1926-31 வரையில் திருவையாறு அரசர் கல்லூரியில் புலவர் பட்டப்படிப்பின்போது, மறைமலை அடிகளின் மகன் மறை. திருநாவுக்கரசுவும் பொன்னம்பலனாரும் ஒரே அறையில் தங்கிப் படித்தனர். அவர்கள் இருவரின் நட்பின் காரணமாக, கோடை விடுமுறையில் மறைமலை அடிகளார் இல்லம் சென்று, அங்கேயே இருந்து இலக்கணமும் இலக்கியமும் கற்றார். அதனால் விளைந்த தனித்தமிழ்ப் பற்றின் காரணமாக ‘கனகசபை’ என்ற வடமொழிப்பெயரை ‘பொன்னம்பலம்’ என மாற்றிக்கொண்டார்.

படித்து முடித்த பின்னர், இன்றைய நாமக்கல் மாவட்டம். பரமத்தி வேலூரில் உள்ள ‘கந்தசாமி கண்டர் அறக்கட்டளை இந்து உயர்நிலைப் பள்ளி’யில் 1931 - 1946 வரை தமிழாசிரியராகப் பணியாற்றினார். அப்போது அந்தப் பள்ளியின் பெயர் வேலூர் இந்து செகண்டரி பாடசாலை என்றிருந்தது. பெருமுயற்சி எடுத்து அந்தப் பெயரை 1936-இல் ‘கந்தசாமி கண்டர் உயர்நிலைப் பள்ளி’ என மாற்றினார். பாவேந்தர் பாரதிதாசன் மூத்த மருமகன் கண்ணப்பனும் அதே பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். தன் மருமகனைக் காண்பதற்காக பாரதிதாசன் அங்கு வரும்போதெல்லாம், பொன்னம்பலனார் சந்தித்து உரையாடுவது வழக்கம். இருவருக்கும் இடையிலான அப்போதைய உரையாடல்களால் பாரதிதாசன் வடமொழிக் கலப்பினைக் கைவிட்டு, தனித்தமிழில் எழுதத் தொடங்கினார்.

அதேசமயம் பொன்னம்பலனாரிடம் பெரியாரைக் கொண்டு சேர்த்தார் பாரதிதாசன். அதன்பிறகு, ‘குடிஅரசு’ இதழை வாசிக்க ஆரம்பித்து ‘தேவாரம்’, ‘திருவாசகம்’ பாடுவதை நிறுத்தினார். 1938-இல் ராஜாஜி ஆட்சிக்காலத்தில் இந்தி திணிக்கப்பட்டபோது பெரியார், மறைமலை அடிகளார், திரு.வி.க. உள்ளிட்டோர் இணைந்து எதிர்ப்புக் குரலை வெளிப்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது ஒவ்வொரு வகுப்பாகச் சென்று, மாணவர்களிடம் பேசி, இந்தித் திணிப்புக்கு எதிரான எதிர்ப்புக் கனலை மூட்டி, மாணவர்களைப் போராட்டக் களத்திற்கு அழைத்து வந்தார். கந்தசாமி கண்டர் பள்ளியில் பணியாற்றிய காலத்தில், பள்ளி ஆண்டு விழாவுக்கு பெரியாரை அழைத்து வந்து, ‘நவீன நந்தனார்’ நாடகத்தை நடத்தினார். கோவில்களைவிட, பள்ளிகளே முக்கியம் என்ற கருத்தை மாணவர்கள் மத்தியில் ஆழமாக விதைத்து, பல மாணவர்களைப் பகுத்தறிவாளர்களாக்கியது இந்த நாடகம்.

1942 - 1946 வரையிலான அந்தக் கால கட்டத்தில், கந்தசாமி கண்டர் பள்ளியில் பொன்னம்பலனாரிடம் கல்வி பயின்றவர்தான் பின்னாளில் பெரியாரியல் பேரறிஞராகத் திகழ்ந்த வே.ஆனைமுத்து. அதன்பிறகு 1947-இல் சேலம் நகராண்மை உயர்நிலைப் பள்ளியில் பொன்னம்பலனார் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். அப்போது அவரிடம் பயின்றவர்தான் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர். இப்படியாகச் சென்ற ஊர்களில் எல்லாம் பல அறிஞர்களை உருவாக்கிய பெருமைக்குரிய பகுத்தறிவு ஆசிரியர் பொன்னம்பலனார் தன் சொந்த ஊரையும் பெரியாரியப் பாதையில் பீடுநடை போட வைத்தார்.

...பயணம் தொடரும்

## தி.மு.க. நம்பிக்கை அளிக்கிறது!

‘தி.மு.கழக ஆட்சி தனக்கென்று சில தனித்தன்மைகளையும் சிறப்புகளையும் கொண்டிருக்கிறது. அவைதான் மற்ற கட்சிகளை விட, தி.மு.க.வை உயரத்தில் நிறுத்தி வைக்கின்றன’ என தன் நண்பருடன் நடந்த உரையாடல் குறித்துப் பதிவிட்டுள்ளார் எழுத்தாளர் மாதவராஜ். அவரது பதிவில் இருந்து...

“தி.மு.க. ஆட்சியில் படிப்பைத் தூண்டுவதற்கும், ஊக்கப்படுத்துவதற்கும் அமல்படுத்தப்பட்டிருக்கிற திட்டங்கள் முக்கியமானவையாய் இருக்கின்றன. எதிர்காலத் தலைமுறை குறித்த அக்கறை அதில் இருக்கிறது.

மகளிருக்கு வழங்கப்பட்டு வரும் உரிமைத் தொகையும், இலவச பஸ் பயணமும் நிச்சயம் குறிப்பிட வேண்டியவை. ஒன்றும் இல்லாத இடத்தில், கையில் கொஞ்சம் பணப்புழக்கத்தையும், அடித்தட்டுப் பெண்களுக்கு ஒரு தன்னம்பிக்கையையும் தருகிற ஏற்பாடுகள் அவை. ஒவ்வொரு வருடமும் மாவட்டம்தோறும் அரசு இயந்திரமே முன்னின்று நடத்தும் புத்தகத் திருவிழாக்கள். தமிழ்ச்சமூகத்தை அறிவுசார்ந்ததாக உயர்த்தும் நோக்கில் ஒரு முயற்சியாகத் தொடர்கிறது.

அடுத்து, மாநில அரசின் உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் பாதுகாப்பதற்கு, தி.மு.க. அரசின் நடவடிக்கைகள் வெடிப்புற இருக்கின்றன. மாநில அரசின் நலன்களையும் உரிமைகளையும் பறிக்கும் பா.ஜ.க. அரசை எதிர்ப்பதில், இதுவரை தமிழ்நாடு காணாத அளவுக்கு ஒரு வேகத்தையும் துடிப்பையும் கொண்டு இருக்கிறது தி.மு.க. ஆட்சி. அ.தி.மு.க.வோ பா.ஜ.க.வின் அடிமையாகவே வீழ்ந்து கிடக்கிறது. மற்ற கட்சிகளிடமும் அதுபோன்ற எதிர்ப்புக்கான அறிகுறிகளே இல்லாமல் இருக்கின்றன. பாராளுமன்றத் தொகுதி மறுவரையறையில் இந்த நிலைமை வெட்ட வெளிச்சமானது.

அதேபோல, மதத்தின் பெயரால் வெறுப்பை விதைத்து, மக்களின் ஒற்றுமையைக் குலைத்து, சமூகப் பதற்றத்தைத் தூண்டி, அந்த நெருப்பில் குளிர்காய நினைக்கும் மதவெறி சக்திகளுக்குச் சவாலாய் இருக்கிறது தி.மு.க. ஆட்சி. மதச்சார்பின்மைக்கு நம்பிக்கையளிக்கிறது. திருப்பரங்குன்றம் விவகாரத்தில், அதனைத் தமிழ்நாடு கண்டது. அ.தி.மு.க. உள்ளிட்ட பிற கட்சிகளிடம் அந்தப் பார்வையும் இல்லை. அரசியல் உறுதியும் இல்லை.

எனவேதான் எதிர்வரிசையில் இருக்கும் மற்ற கட்சிகளைவிட தி.மு.க. சிறந்த கட்சியாக, நம்பிக்கையளிக்கும் கட்சியாக இருக்கிறது’ என நீள்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



கவிஞர் ஆதிரா முல்லை



### நினைவுப் பொக்கிஷம்!

2016-ஆம் ஆண்டு ஜனவரி 15-ஆம் நாள், உச்ச நீதிமன்ற மேனாள் நீதிபதி ச.மோகன் அவர்களுடன் முத்தமிழறிஞர் கலைஞரைச் சந்திக்கச் சென்றேன். கலைஞருக்காக நான் எழுதிக் கொண்டுபோன 12 அடிகளால் ஆன அறுசீர் விருத்தத்தைப் பொறுமையாக முழுவதும் படித்தார். படித்து முடித்தவுடன், “பெயர் என்ன சொன்னீர்கள்” என்று கேட்டார். “டாக்டர் பானுமதி” என்று என்னை நீதியரசர் அறிமுகம் செய்துவைத்தார். கவிதையின் கீழ் ‘ஆதிரா முல்லை’ என்று கையொப்பம் இட்டிருந்தேன். “ஐயா, அது என் புனைப்பெயர்” என்றேன். “பெயருக்கு என்ன காரணம்?” என்று கேட்டார். நான் “மணிமேகலையின் ஆதிரையையும், பிடித்த நிலம் முல்லை என்பதால் அதையும் சேர்த்து வைத்துக்கொண்டேன்” என்றேன். “பெயர் நன்றாக உள்ளது, நிலைத்து நிற்கும்; தொடர்ந்து எழுதுங்கள்” என்று வாழ்த்தினார். அப்போது எடுக்கப்பட்ட இந்தப் படம், என் வீட்டு வரவேற்பறையை அலங்கரிக்கும் நினைவுப் பொக்கிஷம்.

- கவிஞர் ஆதிரா முல்லை,
சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

107

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."



# தொகுதி மறுவரையறை சூழ்ச்சி உறுதியுடன் நின்ற கழகம்!

***தமிழ்நாட்டில் தேர்தல் பிரச்சாரம் செய்ய வந்த பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு ஆகியோர், “மகளிர் இடஒதுக்கீட்டு மசோதாவை தி.மு.க.வும் காங்கிரஸும் தடுத்துவிட்டன” என்று குற்றம்சாட்டியிருக்கிறார்களே?***

‘நானும் திராவிடன்தான்’ என்று பெருமையுடன் சொன்ன சந்திரபாபு நாயுடு தற்போதைய தனது அரசியல் சூழலுக்காக பா.ஜ.க. நிலையை ஆதரித்துப் பேச வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார் என்பது நன்றாகப் புரிகிறது. பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் வஞ்சக எண்ணத்துடன் பொய்ப் பிரச்சாரத்தைப் பரப்புகிறார்கள். தி.மு.க. தொடர்ந்து எதிர்த்து வருவது தொகுதி மறுவரையறை மசோதாவைத்தான். மக்கள்தொகை அடிப்படையில் தொகுதிகளை மறுவரையறை செய்யும்போது, நாட்டின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு குடும்பக்கட்டுப்பாடு போன்ற திட்டங்களை முறையாகச் செயல்படுத்திய மாநிலமான தமிழ்நாடும் தென்னிந்திய மாநிலங்களும் பாதிக்கப்படும் என்பதைப் புள்ளிவிவரங்களுடன் தமிழ்நாடு முதலமைச்சர் விளக்கியிருக்கிறார். பாதிக்கப்படும் மாநிலங்களின் முதலமைச்சர்கள், அரசியல் தலைவர்களை, சென்னைக்கு அழைத்து கூட்டமும் நடத்தியிருக்கிறார். தென்னிந்திய மாநிலங்களில் ஒன்றான ஆந்திராவும் பாதிக்கப்படும் என்பது, அதன் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவுக்கும் தெரியும். அதை நேரடியாகச் சொல்ல முடியாமல்தான், ‘மூன்றாவது குழந்தை பெற்றுக்கொண்டால், பரிசுகள் வழங்கப்படும்’ என்று அறிவித்திருக்கிறார்.

அளவான குடும்பமும் அபாரமான வளர்ச்சியும் கொண்ட தமிழ்நாடு போன்ற மாநிலங்கள், மக்கள்தொகை அடிப்படையிலான தொகுதி மறுவரையறையால் பாதிக்கப்படக் கூடாது என்பதுதான், தி.மு.க.வின் நிலைப்பாடு. இத்தகைய மாநிலங்களுக்கு பாதிப்பு ஏற்படாது என்பதற்கான எந்த உத்தரவாதமும் இடம்பெறாத சட்டத்திருத்தத்தை எப்படி ஏற்க முடியும்? எந்த வகையில் ஆதரிக்க முடியும்? இது பா.ஜ.க. அரசுக்கும் தெரியும். ஆனாலும், அதை மறைப்பதற்காக 2023-ஆம் ஆண்டே, தி.மு.க. - காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் பா.ஜ.க. அரசால் நிறைவேற்றப்பட்ட பெண்களுக்கு நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் இடஒதுக்கீடு அளிக்கும் மசோதாவை மீண்டும் முன்னெடுத்து, அதனை முகமூடியாக்கி தொகுதி மறுவரை யறைக்கான சட்டத்திருத்தத்தை நிறைவேற்ற நினைத்த பா.ஜ.க.வின் சதியை, சரியாகக் கண்டறிந்து முதல் குரல் கொடுத்து, நாடாளுமன்றத்திலும் முறியடிக்கச் செய்திருக்கிறார் கழகத் தலைவர்.

கலைஞர் ஆட்சியில், 1996-ஆம் ஆண்டு 33% மகளிர் இடஒதுக்கீட்டுடன் முதல் முறையாக தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல் நடந்தது. 2022-இல் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 50% இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தியவர் தமிழ்நாட்டின் முதலமைச்சரான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். தற்போது தமிழ்நாட்டில் உள்ள 21 மேயர்களில் 11 பெண் மேயர்கள் இருக்கிறார்கள். தலைநகரான சென்னையில் பட்டியல் இனத்தைச் சேர்ந்த பெண் மேயர் பொறுப்பு வகிக்கிறார் சென்னை மாநகராட்சியில் மொத்தமுள்ள 200 வார்டுகளில் 102 பெண் கவுன்சிலர்கள் உள்ளனர். அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30% இடஒதுக்கீடு வழங்கியவர் கலைஞர். அதனை 40%ஆக உயர்த்தியிருப்பவர் இன்றைய முதலமைச்சர். இந்தியாவிலேயே பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் சமபங்கு உரிமை எனும் சட்டத்தை நிறைவேற்றியவரும் கலைஞர்தான். பெண்களின் உரிமைகளைக் காப்பதிலும் அவர்களின் முன்னேற்றத்திற்குத் துணை நிற்பதிலும் தி.மு.க.வுக்கு நிகராக இன்னொரு அரசியல் இயக்கம் கிடையாது. மோடி-அமித்ஷாவின் புளுகுகள் ஒருபோதும் இங்கே எடுபடாது.

...வினா தொடரும்.

## மடல் ஊருக

### மாநில உரிமைகளுக்குப் பாடுபடுவோம்!

1967-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை மாநில உரிமைகளைப் பாதுகாக்க வலியுறுத்தியது. ‘மாநில உரிமைகள் நசுக்கப்படாமல் பாதுகாத்திடவும், பொருளாதார வளம் ஒரே சீராக எல்லா மாநிலங்களுக்கும் அமைவதற்கான திட்டம் மேற்கொள்ளப்படவும், குறிப்பிடப்படாத மிச்ச அதிகாரங்கள் மத்திய சர்க்காரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள முறையை மாற்றி, அவை மாநிலங்களுக்குத் தரப்பட வேண்டும் என்பதற்குக் கழகம் பாடுபடுவதுடன், அந்த நோக்கத்துடன் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறது’ என்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900